மாண்புமிகு திரு. கே.இராஜாமுகமது : (அ) திட்டம் ஆரம்ப ஆய்வு நிலையில் உள்ளது.

(ஆ) மற்றும் (இ) திட்டம், ஆரம்ப ஆய்வு நிலையில் உள்ளதால் இவ்வினாக்களுக்கு இடமில்லை.

பாசனத்திற்காக பஞ்சப்பள்ளி அணையிலிருந்து தண்ணீர் விடும் திட்டம்

*வினா எண் 414— திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளி அணையிலிருந்து இராமக்காள் ஏரி வரை நீர்ப்பாசனத்திற்காக நீர்விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) எப்போது விடப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) : தர்மபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளி அணையிலிருந்து தர்மபுரி அருகில் உள்ள இராமக்காள் ஏரிக்கு 1979 ஆம் ஆண்டிலேயே ஜெர்தலாவ் ஏரி வழியாக வெட்டப் பட்ட வாய்க்கால் மூலம் தண்ணீர் விடப்பட்டது. சென்ற ஆண்டில் போதிய நீர்வரத்து இல்லாமையால் அணையிலிருந்து தண்ணீர் விடப்படவில்லை.

திரு. எஸ். அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரிக்கு அருகிலே இருக்கின்ற இராமக்காள் ஏரி நகராட்சிக்கு உள்ளடங்கிய பகுதியாக இருக்கின்றது. போதிய தண்ணீர் இல்லாததால் தண்ணீர் விடப்படவில்லை என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். ஆனால் நகராட்சிக்கு உள்ளடங்கிய பகுதியாக இந்த ஏரி இருப்பதால் இதற்குத் தண்ணீர் விடப்பட்டால் அந்த நகரத்தின் குடிநீர் பிரச்சினை தீருவதோடு கிணறுகளிலும் நீர் அதிகமாகும். விவசாயத்திற்கும் உதவியாக இருக்கும். பஞ்சம் தீரும் ஆகவே இதற்கு முன்னுரிமை கொடுத்து ஆவன செய்ய அரசு முன்வருமா ?

(முற்பகல் 10—20)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தர்மபுரிக்கு அருகே இருக்கக்கூடிய இராமக்காள் ஏரிக்கு 1979ஆம் ஆண்டிலே, ஜெர்தலாவ் ஏரி மேல் வெட்டப் பெற்ற வாய்க்கால் மூலம் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. நீர் வரத்து குறைவாக இருக்கிற காரணத்தால்

[981 மார்ச் 25]

தண்ணீர் போய் சேரவில்லை என்ற குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருததையும் எடுத்துக் கொண்டு அரசு தீவிரமாக சிந்தித்தே ஒரு முடிவிற்கு வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலைத் தொடங்கி முடிவுறமால் உள்ள அணைக்கட்டுத் திட்டங்கள்

*வினா எண் 415—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முடிவுறாமல்-வேலை துவங்கி அறைகுறையாய் நிற்கும் அணைக்கட்டுத் திட்டங்கள் ஏதேனும் உளவா ? எவையெவை ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேறும் ?

(இ) என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) வேலை தொடங்கி முடிவுறாமல் அறை குறையாக இரண்டு அணைக்கட்டுத் திட்டங்கள் உள்ளன. அவையாவன தருமபுரி மாவட்டம் ஓசூர் வட்டத்தில் கெலவரப்பள்ளி அருகே அமைக்கப்பட்டு வரும் கெலவரப்பள்ளி அணைத் திட்டமும் மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டம் அழகாபுரி கிராமத்தினருகே உள்ள குடகனாறு நீர்த்தேக்கத் திட்டமும் ஆகும்.

(ஆ) மற்றும் (இ) கெலவரப்பள்ளி திட்டத்திற்காக சில நிலங்களை கையகப்படுத்துவதற்கு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ் வெளியிட்ட அறிக்கையினை எதிர்த்து நிலங்களின் சொந்தக்காரர்கள் என்று உரிமை கோருபவர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரிட் மனுவின் பேரில் உயர் நீதி மன்றம் நவம்பர் 79—ல் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனால் அணைக்கட்டும் வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நீதி மன்றத்தின் தடையுத்தரவு நீக்கப்பட்ட பின் வேலை துவங்கப்படும்.

அநேகமாக கட்டி முடிக்கப்பட்டிருந்த தறுவாயில் குடகனாறு அணையின் மண் அணைப் பகுதி 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் உடைந்தது. இவ்வணையை மீண்டும் புனரமைப்புச்செய்வதற்கான பாசனத் தலைமைப் பொறியாளரின் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.